**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**
**(2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் பதிவு செய்தவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்)**

## (A) பரீட்சை விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்

1. தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் பரீட்சையின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடவும்.
   (உ-ம்:
   First Year Examination in Bachelor of Arts
   Second Year Examination in Bachelor of Business Administration
   Third Year Examination in Bachelor of Commerce

2. தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வெளிவாரி அபேட்சகருக்கான குறிப்புப் புத்தகத்தில் காணப்படும் தங்களது பதிவு இலக்கத்தை உரிய குறியீட்டு எழுத்துடன் சரியாகக் குறிப்பிடவும். (உ-ம்: SEU/ES/07/AT/2345)
   - முதலெழுத்துக்களுடன் பெயரை எழுதவும் (உ-ம்: M.S. Sifan)
   - முழுப் பெயரை முறையாக சொற்களைப் பிரித்து எழுதவும் (உ-ம்: Mohamed Saleem Sifan)

3. தங்களது சரியான விலாசத்தையும், தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்கள் இரண்டையும், மின்னஞ்சல் முகவரியையும் குறிப்பிடவும்.

4. பாடத்தின் சரியான குறியீட்டையும் பாட அலகுகளையும் குறிப்பிடவும்.
   உ-ம்: 1. GGY 1.11 Fundamentals of Environmental Geography
   2. GGY 1.21 Introduction to Practical Geography

5. பரீட்சை நிலையம்: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் (ஒலுவில்) மாத்திரம் பரீட்சைகள் யாவும் நடாத்தப்படும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

6. பரீட்சைக் கட்டணங்கள்: கட்டணங்களைச் செலுத்தி உரிய விபரங்களைக் குறிப்பிடவும்
   - ஒரு பாட அலகிற்கு ரூபா. 500.00 என்பதுடன் ஒன்பது அல்லது அதற்கு மேற்பட்ட அலகுகளுக்கு ரூபா. 4,500.00 ஆகும். (உ-ம்) BEN 1.11, BEN 1.21 என்பன இரண்டு தனிப்பட்ட பாட அலகுகளாகும்)
   - பரீட்சைக் கட்டணங்கள் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற உறுதிச்சீட்டு (PIV) மூலமே எந்தவொரு மக்கள் வங்கிக்கிளையிலும் செலுத்த முடியும். வங்கியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட PIV University Copy ஐ பரீட்சை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழராதபடி ஒட்டவும். வங்கிப் பற்றுச் சீட்டினை தங்களுடன் வைத்திருப்பது நன்று)

வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்த பின்பு உரிய இடத்தில் கையொப்பமிடவும்.

## (B) வேறு அறிவுறுத்தல்கள்

1. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்தில் அல்லது உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்படல் வேண்டும்.
   - குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு (PIV University Copy)
   - தங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி இடது பக்க மேல் மூலையில் பதிவு இலக்கத்தினையும் பரீட்சைக்குத் தோற்றுகின்ற ஆண்டினையும் எழுதி ரூபா 40.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட 9”x4” அளவிலான இரண்டு தபாலுறைகள்
   - அண்மையில் எடுக்கப்பட்ட தங்களது நிழற்பிரதி (Photo) ஒன்றினை விண்ணப்பத்தின் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ள பெட்டியினுள் ஒட்டுதல் வேண்டும். அதன் கீழுள்ள சிறிய பெட்டியினுள் தங்களது ஒப்பத்தினை தெளிவாக இடல் வேண்டும்.

3. பரீட்சை விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தோற்றும் பரீட்சையின் பெயரையும் வெளிவாரி அபேட்சக பதிவு இலகத்தையும் தெளிவாகக் குறிப்பிடவும்.

4. பூரணப்படுத்தப்பட்ட பரீட்சை விண்ணப்பத்தை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திற்கு எதிர்வரும் **28.03.2016ஆம்** திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக அனுப்பலாம்.:

Assistant Registrar,
Centre for External Degrees & Professional Learning (CEDPL),
South Eastern University of Sri Lanka,
Oluvil # 32360

5. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு மாறாக அல்லது குறிப்பிட்ட தேவைகள் பூர்த்தி செய்யப்படாத அல்லது தாமதித்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு உரிய நேரத்தில் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

7. பரீட்சைக்கு விண்ணப்பித்ததன் பின்பு பரீட்சையிலிருந்து விலகிக்கொள்ளும் பரீட்சார்த்திகள் தமது விலகல் மனுவினை எதிர்வரும் 28.04.2016ஆம் திகதி அல்லது முன்னர் வெளிவாரி பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையத்தில் (CEDPL) கிடைக்கச் செய்தால் தாம் செலுத்திய பரீட்சைக்கட்டணத்தில் 75% இனை மீளப்பெற்றுக்கொள்ள முடியும். இத்திகதியின் பின்னரான விலகல் மனுக்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

---

8. **மூன்றாம் வருட மாணவர்களுக்கு மாத்திரம்**

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலைய (CEDPL) வெளிவாரி மாணவர்களுக்கான தமது பாட விதானங்களை மீட்டலும் கடந்த கால பரீட்சை வினாத்தாள்களை பயிற்றுவித்தலும் சம்மந்தமான பரீட்சை முன்னோடிக் கருத்தரங்குகள் எமது பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர்களால் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் மூன்றாம் வருட பரீட்சை எழுதுகின்ற சகல மாணவர்களும் கலந்துகொள்வது அத்தியாவசியமாகும்.

ஒரு பாட அலகுக்கு 800/= வீதம் தாம் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பாட அலகிற்கு ஏற்ப கருத்தரங்கிற்கான கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். கட்டணங்களை பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற உறுதிச்சீட்டு (PIV) மூலம் எந்தவொரு மக்கள் வங்கிக்கிளையிலும் செலுத்த முடியும் (உதாரணமாக - GGY 3.11 - Rs: 800, GGY 3.12 - Rs: 800 = 1600.00 எனக் கொள்ளப்படல் வேண்டும்). வங்கியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட PIV University Copy ஐ கருத்தரங்கிற்கான விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராதபடி ஒட்டப்படல் வேண்டும் (வங்கிப் பற்றுச் சீட்டினை தங்களுடன் வைத்திருப்பது நன்று). பரீட்சைக்கட்டணம், கருத்தரங்குகளுக்கான கட்டணம் என்பன வெவ்வேறாக செலுத்தப்பட்டு இவ்விரு பற்றுச் சீட்டுகளும் உரிய விண்ணப்பங்களுடன் ஒட்டப்படல் வேண்டும். கருத்தரங்கிற்கான கட்டணம் செலுத்தாமல் பரீட்சைக்கட்டணம் மட்டும் செலுத்திய விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும். சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் தெ.கி.ப.க. இல் மாத்திரமே இக்கருத்தரங்கு நடைபெறும்.

9. பரீட்சைக்கான கட்டணம் படிவம்-I (Form-I) இல் ஒட்டப்படல் வேண்டும். கருத்தரங்கிற்கான கட்டணம் படிவம்-II (Form-II) இல் ஒட்டப்படல் வேண்டும்.

---

10. 2ஆம், 3ஆம் வருடங்களுக்கு மீள்பதிவு செய்த மாணவர்கள் மாத்திரமே 2ஆம் 3ஆம் வருட பரீட்சைகளுக்கு அனுமதிக்கப்படுவர். அதேபோல், 2006ம், 2007ம் ஆண்டுகளில் பதிவு செய்த மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு முன் தங்களது பதிவினை நீடிப்பு செய்தல் வேண்டும்.

மேலதிக தொடர்புகளுக்கு : 0672052801
இணையத்தள முகவரி : www.seu.ac.lk

உதவிப் பதிவாளர்
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம் (CEDPL)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
ஒலுவில்